1986 மே 6]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனியாக வினா போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிகளுக்குத் தேவையான நூல்

683—(* வினா எண் 8991) திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி துணி தயாரிக்கத் தேவைப் படும் நூல் அவ்வளவும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலையால் விநியோகிக்கப்படுகிறதா ?

(ஆ) கூட்டுறவு நூற்பாலை தயாரிக்கும் நூலின் தரம், விலை வெளி மார்க்கெட்டில் உள்ளதை விட குறைவாக இருக்கிறதா? அதிகமாக இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு நூற்பாலை தயாரிக்கும் நூலின் தரம் நன்றாக இருக்குமாறு, பல வகையில் பரிசோதிக்கப்பட்டு, பிற்பாடுதான் மார்க்கெட்டிற்கு விற்க அனுமதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளிலும் தயாரிக்கப்படுகிற நூலுக்கு இந்தியத் தரக்கட்டுப்பாட்டினுடைய முத்திரை போடப்படுகிறது. வெளி மார்க்கெட்டிலுள்ள விலையை விட சற்றுக் குறைவாகவே கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து, கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கும் நூலின் விலை இருக்கிறது.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலையினுடைய விலைக்கும், கைத்தறி நெசவாலைகளுடைய விலைக்கும் மாறுபாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இந்த மாறுபாடே இல்லாமல் ஒரே விலையாக நிர்ணயிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மாத்திரம்தான் நூல் விலை நிர்ணயிக்கிற குழு ஏற்பாடு செய்யப் பட்டு அது மாதம் ஒரு தடவை கூடி, அவ்வப்போது மார்க்கெட்டில் நிலவுகிற விலைக்கேற்ப கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப் படும் நூலின் விலையை நிர்ணயம் செய்கிறது. எங்கேயாவது, மார்க்கெட் விலையை விட அதிகமாக கோ-ஆப்டெக்ஸ் நூல் வழங்கப்பட்டு விற்கப்பட்டு இருக்குமானால், அரசின் கவனத் திற்கு அது கொண்டு வரப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசுப் பணிகளில் பெண்களுக்கு ஒதுக்கீடு

684—(* வினா எண் 7896) திரு. பரிதி இளம்வழுதி : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரசு வேலைகளில் 50 சதவீதம் பெண்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு உத்தியோகம் கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் பதிலில், இல்லை என்று சொல்கி றார்கள். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் எம்.ஏ., பி.ஏ., எம்.எஸ்ஸி., பி.எஸ்ஸி., என்று படித்து விட்டு, வேலை இல்லாமல், கணவனால் கைவிடப்பட்டு, அடித்துத் துரத்தப்பட்டு, திக்கற்ற நிலைமையிலே தன்னுடைய குழந்தைகளோடு துன்புற்றுக் கொண்டிருக்கிற அந்தப் பெண்கள் சமுதாயத்தை மனதிலே வைத்து, அவர்களுக்கு எல்லாத் துறையிலும் 50 சதவிகிதம் இல்லையெனினும்கூட குறைந்தபட்சம் 25 சதவிகிதமாவது, அவர் களுக்குத் தகுதி இருந்தால் வேலைவாய்ப்புக் கொடுக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.